Registered as a Newspaper
பக்கங்கள் 12 விலை ரூ. 50




# உதயன்

சுடர் : 38
கதிர் : 156
திங்கட்கிழமை 01 மே 2023
சித்திரை 18 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## அமைச்சரவை மறுசீரமைப்பு காலவரையின்றி ஒத்திவைப்பு

கொழும்பு, மே 1
உத்தேச அமைச்சரவை மறுசீரமைப்பு காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. இதனால் பொதுஜன பெரமுன கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் கவலையில் உள்ளனர் எனவும் தெரியவருகின்றது.
அமைச்சரவை மாற்றம் விரைவில் நடைபெறவுள்ளது என கடந்தகாலங்களில் »11

## மஹிந்தவைப் பிரதமராக்க பேரமுன இன்று தீர்மானம்



கொழும்பு, மே 1
மஹிந்த ராஜபக்சவை பிரதமராக்குவதற்காக பொதுஜன பெரமுனவினர் தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி »11

## அரசியல்தீர்வு விவகாரம்; எதிரணியே குழப்பியடிப்பு

### பழிபோடுகிறார் ஜனாதிபதி ரணில்



யாழ்ப்பாணம், மே 1
அரசாங்கம் முன்னெடுத்த அரசியல் தீர்வு தொடர்பான விவகாரங்களை எதிரணிகளே குழப்பியடித்தன. தமிழ்க் கட்சிகள் அரசாங்கத்துக்கு இந்த விடயத்தில் ஒத்துழைத்தாலும் »11

# பிரபாகரனின் கதையை முடித்தோருக்கே தடையாம்!

## அமைச்சர் அமுனுகமவின் விளக்கம் இது





**கொழும்பு, மே 1**
**பிரபாகரனின் கதையை முடிப்பதற்கு பங்களிப்பு வழங்கியவர்களுக்கே அமெரிக்கா பயணத் தடை விதித்துவருகின்றது. கோத்தாபய ராஜபக்சவைக் கூட அமெரிக்காவே வீட்டுக்கு அனுப்பி வைத்தது - என்று இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.** »11

### 12 மற்றும் 13 வயதேயான

## சிறுமிகள் வன்புணர்வு; நால்வருக்கு மறியல்!

யாழ்ப்பாணம், மே 1
கிளிநொச்சியைச் சேர்ந்த 12 மற்றும் 13 வயதுச் சிறுமிகளை வன்புணர்ந்த குற்றச்சாட்டில் 3 இளைஞர்களும், யாழ்ப்பாணத்தில் விடுதியொன்றின் முகாமையாளரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். கடந்த »11

### 6 வயதான

## சிறுமி துஷ்பிரயோகம் இளைஞர் கைதானார்

வவுனியா, மே 1
வவவுனியாவில் 6 வயதுச் சிறுமியைத் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்தனர். சிறுமிக்குத் தந்தை இல்லை. தாயார் »11



## பெற்றோல், டீசலின் விலைகள் குறைப்பு

கொழும்பு, மே 1
நேற்று நள்ளிரவு முதல் பெற்றோல் மற்றும் டீசல் என்பவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. »11

## 3 மாத கர்ப்பிணிப் பெண் வவுனியாவில் உயிரிழப்பு

வவுனியா, மே 1
வவுனியாவில் 3 மாத கர்ப்பிணிப் பெண் பலோப்பியன் குழாய் வெடித்ததில் உயிரிழந்துள்ளார். நாகர் இலுப்பைக்குளத்தைச் சேர்ந்த சுரேஷ்குமார் சோபனா (வயது- 21) இளம் குடும்பப் பெண்ணே உயிரிழந்தார். அவர் ஒன்றரை வயதுக் குழந்தையின் தாயாரும் ஆவார்.
வவுனியா மாவட்ட மருத்துவமனையில் வயிற்றுக்குத்துக் காரணமாக நேற்றுமுன்தினம் »11

## சிங்கள ஆக்கிரமிப்புக்கு எதிராக அணிதிரள்வோம்

### கஜேந்திரகுமார் அறைகூவல்

யாழ்ப்பாணம், மே 1
திட்டமிட்ட சிங்கள மயமாக்கல்களுக்கு ஒரு தேசமாக நாங்கள் எதிர்ப்பு தெரிவிக்காத வரைக்கும் எங்களுடைய நிலங்கள்பறிபோய்க் கொண்டே இருக்கும் என தமிழ்த் தேசிய »11

## போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், மே 1
சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊரெழு பகுதியில் போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். »11

## மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே 1
கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோப்பாய் பகுதியில் வேலைத்தளமொன்றில் மின்சாரம் தாக்கியதில் ஒருவர் நேற்று உயிரிழந் »11

### தமிழர்களுக்கு நீதிகோரும் பயணத்தில்

## முள்ளிவாய்க்கால் அஞ்சலியை அர்த்தமுள்ளதாக மாற்றுவோம்!

### நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு அறிக்கை

முல்லைத்தீவு, மே 1
முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை நாளை, தமிழினத்துக்கான நீதிவேண்டிய பயணத்தில் வினைத்திறன் மிக்கதாக்குவோம். »10


## இரு மாதங்களில் மீண்டும் யாழ் - கொழும்பு ரயில்!

யாழ்ப்பாணம், மே 1
வடக்கில் ரயில் தண்டவாள சீரமைப்புப் பணிகள் இன்னும் இரண்டு மாதங்களுக்குள் »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாற்றை ஆராய விரைவில் புதிய நிறுவனமாம்

## ஜனாதிபதி கூறுகின்றார்



**கொழும்பு, மே 1**

**இலங்கையின் வரலாற்றை ஆய்வு செய்வதற்காக புதிய நிறுவனம் ஒன்று விரைவில் உருவாக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

தேசிய அருங்காட்சியகம், ஆவணக் காப்பகத் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம், கலாசார முக்கோணம், பல்கலைக் கழகங்கள் மற்றும் றோயல் ஆசிய சங்கம் என்பவற்றை இணைத்து நிறுவி, அதற்கான சட்டவரைவை நிறைவுசெய்வதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

மகாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்ற றோயல் ஆசிய சங்கத்தின் 178ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது:-

நாம் பதிவு செய்துள்ள வரலாறு இந்தியாவுக்கு இல்லை. நமது மகாவம்சத்தைப்போலவே, அரசியல் விமர்சகர்களும் எழுதப்படாத வரலாற்றை ஆராய்ந்தே இந்திய வரலாற்றை விளக்குகிறார்கள். இருப்பினும், வரலாற்றுக்கு ஒரு பாரம்பரியமுள்ளது. அந்த வரலாற்றை நாம் தொடரவேண்டும். இது எங்களுக்கு மிகவும் முக்கியமானது. அந்த வரலாற்றைப் பாதுகாக்க நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும். வரலாற்றை ஆராய்வதன் மூலம் வருங்கால வரலாற்றைப் பாதுகாக்கும் றோயல் ஆசிய சங்கத்தின் முயற்சிகள் பாராட்டப்படவேண்டிய பணியாகும். றோயல் ஆசிய சங்கத்தின் சில சஞ்சிகைகளின் மூலப் பிரதிகளைப் படித்திருக்கிறேன். நான் முதலில் செய்ய விரும்புவது வரலாற்றுக்கான ஒரு கல்வி நிறுவனத்தைத் தொடங்குவதுதான். எனது பதவிலம் முடிவதற்குள் இது தொடர்பாகக் கலந்துரையாடி முடிவு எடுக்கவேண்டும். அதற்காகப் பல்கலைக்கழகங்கள், தொல்பொருள் திணைக்களம் மற்றும் றோயல் ஆசிய சங்கம் ஆகியவற்றுடன் கலந்துரையாட வேண்டிய இறுதி வரைவை நாங்கள் தயாரித்து வருகிறோம். எதிர்காலத்தில் இந்தத் துறையின் பணிகளுக்கு நிதி மற்றும் அரசாங்க ஆதரவை நாங்கள் வரலாற்று நிறுவனம் மூலம் வழங்குவோம் - என்றார். (எ-இ)

# முந்திச்செல்ல முற்பட்டு வாகனங்கள் விபத்து!

## ஒருவர் படுகாயம்

கிளிநொச்சி, மே 1

இரு வாகனங்கள் ஒன்றையொன்று முந்திச் செல்ல முற்பட்டபோது இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து கிளிநொச்சியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி நோக்கி பயணித்த கப் வாகனமும் அதேபகுதியில் இருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்த முச்சக்கரவண்டியும் ஒன்றையொன்று முந்திச் செல்ல முற்பட்டவேளை கப்ர வாகனத்துடன் மோதுண்ட முச்சக்கரவண்டி பலத்த சேதத்துக்குள்ளாகியது.

இதன்போது முச்சக்கரவண்டி சாரதி படுகாயம் அடைந்த நிலையில் மீட்கப்பட்டு தருமபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். விபத்து குறித்து தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-113)

# வன்புணர்வுக்குட்படுத்தி 52 வயதுப் பெண் கொலை!

## சந்தேகநபர் கைது

கொழும்பு, மே 1

பெண்ணொருவரை பாலியல் வன்புணர்வுக்குட்படுத்திக் கொலை செய்த குற்றச்சாட்டில் 47 வயதுடைய ஒருவரை மிஹிந்தலைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

மிஹிந்தலை, தொரமடலாவ பிரதேசத்தில் வசிக்கும் 52 வயதுடைய பெண்ணொருவரே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

தாயுடன் வசித்து வந்த இந்தப் பெண் நேற்றுமுன்தினம் வீட்டில் தனித்திருந்தபோது, பக்கத்து வீட்டில் வசித்து வந்த சந்தேகநபர், அந்தப் பெண்ணை பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தியுள்ளார் என்று விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளியே சென்றுவிட்டு வீடு திரும்பிய பெண்ணின் தாய், மகள் படுக்கையில் சுயநினைவின்றி இருப்பதையும், சந்தேகநபர் வீட்டில் இருப்பதையும் அவதானித்துள்ளார். மகளை மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல அம்புலன்ஸை அழைத்த நிலையில், அங்கு வந்த மருத்துவ உதவியாளர்கள் பெண் உயிரிழந்திருந்ததை உறுதிப்படுத்தியுள்ளனர். (எ-இ)

# பதுக்கப்பட்ட 50,000 முட்டைகள் மீட்பு

கொழும்பு, மே 1

குருநாகல் - ஹெட்டிபொல பகுதியில் களஞ்சியசாலையொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 50 ஆயிரம் முட்டைகளை நுகர்வோர் அதிகாரசபை மீட்டுள்ளது.

முட்டைகளை கொள்வனவு செய்யும் போர்வையில் முகவர் ஒருவரை பயன்படுத்தி முன்னெடுக்கப்பட்ட சோதனையில் முட்டை பதுக்கல் கண்டறியப்பட்டது.

குறித்த களஞ்சியசாலையின் உரிமையாளரான பெண்ணுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என நுகர்வோர் அதிகார சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை- முட்டைக்காக விதிக்கப்பட்டிருந்த உச்சபட்ச சில்லறை விலையை நீக்குவது தொடர்பாக அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# எலிக்காய்ச்சல் எச்சரிக்கை!

கொழும்பு, மே 1

மழையுடனான வானிலையால் எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் அதிகமுள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 2 ஆயிரத்து 500 பேர் எலிக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞான ஆய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

காலி, மாத்தறை மாவட்டங்களில் மட்டும் 19 பேர் எலிக் காய்ச்சலால் உயிரிழந்துள்ளனர். அந்த மாவட்டங்களில் இதுவரை 229 பேர் எலிக் காய்ச்சலுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (எ-இ)

# சில்லறை விலைக்கு இந்திய முட்டைகள்!

கொழும்பு, மே 1

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளை சில்லறை விலையில் சந்தையில் விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நாட்டில் முட்டைத் தட்டுப்பாடு மற்றும் விலையுயர்வால் இந்தியாவிலிருந்து முட்டையை இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திடமிருந்து அனுமதி கிடைத்ததும் அவற்றை நுகர்வோருக்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என அரச வர்த்தக கூட்டுத்தாபனம் அறிவித்திருந்தது.

அதற்கமைய இறக்குமதி முட்டைகளை சில்லறை விலைக்கு சந்தையில் விற்பனை செய்வதற்கு அனுமதி கிடைத்துள்ளது என அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டார்.

இதேவேளை- முட்டைக்காக விதிக்கப்பட்ட சில்லறை விலையை நீக்குவது தொடர்பாக அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# மாணவர்களை மேம்படுத்த கூ .சங்கங்கள் முன்வருக!

## தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சுட்டிக்காட்டு

சாவகச்சேரி மே 1

மாணவர்களின் எதிர்நோக்கும் நெருக்கடியைக் கருத்திற்கொண்டு குறைந்த விலையில் கற்றல் உபகரணங்களை விற்பனை செய்ய கூட்டுறவு அமைப்புக்கள் முன்வர வேண்டும்.

இவ்வாறு தென்மராட்சி கிழக்கு கூட்டுறவுச் சங்கத்தின் 'வறுமையினுள் திறமை' நிதிய திட்டத்தின் கற்றல் மேம்பாட்டு நிதி வழங்கும் நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தி.கிருபாகரன் தெரிவித்தார்.

கற்றல் உபகரணங்களின் விலை அதிகரிப்பால் பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகிறது.

கிராமப்புறப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களில் பெரும்பாலானவர்கள் பொருளாதார நெருக்கடியிலுள்ளனர். மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு பெற்றோர் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

பல்வேறு நலத்திட்டங்களை செயற்படுத்தி வருகின்ற கூட்டுறவு அமைப்புக்கள் மாணவர்களின் கல்வியில் அக்கறை செலுத்தவேண்டும்.

கற்றல் உபகரணங்களை இலாபமின்றி விற்பனை செய்யவேண்டும் - என்றார். (ச-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் சர்வதேச நாடுகளின் பல்நோக்கு எரிபொருள் நிலையங்கள்

**கொழும்பு, மே 1**

**இலங்கையில் எரிபொருள் விற்பனைக்கு அனுமதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு நிறுவனங்கள், தங்களின் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் விற்பனையுடன் மேலதிக சேவைகளையும் வழங்கத் தீர்மானித்துள்ளன.**

வாகன சுத்திகரிப்பு நிலையம், தங்குமிடவசதிகள் (அறைகள்) பொருள் கொள்வனவு செய்யக்கூடிய வசதிகள் (கடைகள்) என்பன எரிபொருள் நிரப்பு நிலைய வளாகத்தினுள் அமைக்கப்படவுள்ளன. இவ்வாறான பல்நோக்கு எரிபொருள் நிலையத்தை அமைப்பதற்கு ஒன்றரை ஏக்கர் நிலம் தேவை என கூறப்படுகிறது.

தற்போது அமெரிக்காவின் ஆர்.எம்.பார்க் ஷெல் நிறுவனத்துக்கும் சீனாவின் சினோபெக் நிறுவனத்துக்கும் எரிபொருள் விற்பனைக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவற்றுடன் அவுஸ்திரேலியாவின் யுனைட் டெட் பெற்றோலியம் நிறுவனமும் சேவையை வழங்கவுள்ளது.

பெரும்பாலும் கொழும்புக்கு வெளியிலேயே இவர்களின் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. இந்த எரிபொருள் விற்பனை நிலையங்களிலும் கி.யூ.ஆர். நடைமுறைக்கு ஊடாகவே எரிபொருள் விநியோகிக்கப்படவுள்ளது. (எ-6)



## சிவராம், ரஜிவர்மனின் நினைவேந்தல் நிகழ்வு

மாமனிதர் சிவராமின் 18ஆம் ஆண்டு நினைவு நிகழ்வும், ஊடகவியலாளர் ரஜிவர்மனின் நினைவு நிகழ்வும் நேற்றுமுன்தினம் வடக்கில் முன்னெடுக்கப்பட்டது.

நினைவேந்தல் நிகழ்வுகள் யாழ். ஊடக மையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வவுனியாவில் வவுனியா ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் மாமனிதர் சிவராமின் நினைவேந்தல் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாணம் அலுவலகத்திலும் மாமனிதர் சிவராமின் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது. வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் ஏற்பாட்டிலும் மாமனிதர் சிவராமுக்கு அஞ்சலி நிகழ்வு நடத்தப்பட்டது.

ஊடகவியலாளரான தராகி சிவராம் என்றழைக்கப்படும் தர்மரத்தினம் சிவராம் 2005ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி கொழும்பு பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்துக்கு அருகில் வைத்து வெள்ளை வானில் வந்த இனம் தெரியாதவர்களால் கடத்தப்பட்டார். அதன்பின்னர் நாடாளுமன்றத்துக்கு அருகில் சடலமாக மீட்கப்பட்டார்.

ஊடகவியலாளரான செல்வராஜா ரஜீவர்மன் உதயன் பத்திரிகையின் அலுவலக செய்தியாளராகக் கடமையாற்றியபோது 2007ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் ஸ்ரான்லி வீதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாத நபர்களால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார். (எ-110-20)

ஈழத்துச்சிதம்பர விவகாரம்;

## இரு தரப்பினரும் சமரசப்பேச்சுக்கு வருக

### புத்திஜீவிகள் அழைப்பு

யாழ்ப்பாணம், மே 1

வரலாற்றுப் பிரசித்திபெற்ற காரைநகர் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானத்துக்கு உரித்தான மாணிக்கவாசகர் மடாலயம் சம்பந்தமான விவகாரத்தை சமாதானமாக பேசித் தீர்ப்பதற்கு காரைநகர் புத்திஜீவிகளால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மாணிக்கவாசகர் மடாலயம் சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஏற்படாக காரைநகர் வாழ் புத்திஜீவிகள் மற்றும் நலன்விரும்பிகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஒன்றுகூடி கலந்தாலோசித்தனர். இந்தக் கூட்டத்துக்கு மடாலயத்தின் உறுப்பினர்களில், உபதலைவர் உட்பட 4 பேர் சமுகமளித்தனர்.

இதன்போது நல்லெண்ண அடிப்படையில் இருதரப்பையும் அழைத்து கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டது.


மாணிக்கவாசகர் மடாலாயத்தினருக்கும் ஈழத்துச் சிதம்பர ஆலய நிர்வாகத்தினருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடு காரணமாக நீதிமன்றில் வழக்கு தொடர்கிறது.

இரு தரப்பினரிடையேயும் கருத்து பரிமாறும் மூலமாக இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு பெற்றுக்கொள்ளலாம். வரலாற்று உண்மைகளை மதித்து தூரநோக்குடன் சிந்திப்பதுடன் கலந்துரையாடல் மூலமான சமரச பேச்சுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

ஆகவே எதிர்வரும் வழக்கின்போது நீதிமன்றில் அவகாசம் பெற்று இரு தரப்பினரையும் சமாதான பேச்சுக்கு அழைக்கிறோம் என புத்திஜீவிகள் அழைப்பு விடுத்துள்ளனர். (ச-20)

# சட்டவிரோதமாக மாடுகள் கடத்தல்

## முகமாலையில் இருவர் கைது



முகமாலைப் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி 7 மாடுகளை ஏற்றிச் சென்ற சந்தேகநபர்கள் இருவரை பளை பொலிஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர்.

ஏ-9 வீதியூடாக பயணித்த கப் ரக வாகனத்தை முகமாலைப் பகுதியில் மறித்து சோதனையிட்டபோது அனுமதிப் பத்திரமின்றி மாடுகளை ஏற்றிச் செல்ல முற்பட்டமை கண்டறியப்பட்டது.

அதனையடுத்து சாரதி மற்றும் உதவியாளரை பொலிஸார் கைதுசெய்தனர். மாடுகளை ஏற்றிச் செல்ல பயன்படுத்தப்பட்ட கப் ரக வாகனமும் கைப்பற்றப்பட்டது.

பளையிலிருந்து யாழ்ப்பாணம் சாவகச்சேரிக்கு இறைச்சிக்காக குறித்த மாடுகள் ஏற்றிச் செல்லப்பட்டமை விசாரணையில் தெரியவந்தது. மேலதிக விசாரணையின் பின் சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பளைப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-9)




**சிவாஜிலிங்கத்தாற்ர வீடியோதான் இப்ப வைரல். வீடியோ எண்டவுடன் ஏதோ வில்லங்கமான காட்சி எண்டு நினைச்சிடாதேயுங்கோ. இஞ்சயிருந்து வெளிநாட்டுக்கு களவா போறவை, அங்க அரசியல் தஞ்சம் (அசைலம்) கேக்கிறதுக்காக ஒரு வழக்குப் போடவேணும். அதில இஞ்ச ஏன் அவை இருக்க ஏலாது எண்ட காரணத்தை ஆதாரத்தோட அவை முன்வைச்சாத்தான் அவையை நாடு கடத்தாமல், அங்க அரசியல் தஞ்சமும், தற்காலிக வதிவிடமும் குடுப்பினம். அதுக்குப் பிறகு நிரந்தர விஸா கிடைக்கும். இப்பிடியான கேஸ்"களுக்கு எங்கட தமிழ் எம்.பி. மார் உறுதிப்படுத்தல் கடிதம் குடுக்கிறவை. அதை வெளிநாட்டில பெரிசாக் கணக்கெடுக்காட்டியும் ஒருவகையில சப்போர்ட்டா இருக்கும். அப்பிடி சிவாஜிலிங்கத்தாரிட்ட உதவிகேட்டுப் போன ஒருத்தர் எடுத்த வீடியோதான் இப்ப ஏதோ ஒரு தரப்பால 'லீக்' பண்ணிப்பட்டு இருக்கு.**

**கிட்டதட்ட ஆறுவருசத்துக்கு முதல் அந்த வீடியோ எடுக்கப்பட்டிருக்கு. ஏனெண்டால் ஆறுவருசத்துக்கு முதல்தான் வீடியோ எடுக்கப்பட்ட ஒப்பீஸில சிவாஜியர் இருந்தவர். பிறகு இடம் மாறிட்டார். ஆறு வருசத்துக்கு முந்தின வீடியோ ஏன் இப்ப 'லீக்' ஆகியிருக்கு? எண்டதுக்கும் அந்த வீடியோவிலயே பதில் இருக்கு. 'இஞ்ச உள்ளவை பொய் சொல்லித்தான் வெளிநாடுகளில அரசியல் தஞ்சம் கோருகினம். அப்பிடி அரசியல் தஞ்சத்துக்காக சொல்லுற பொய்யை வெளிநாடுகள் நம்பவேண்டாம்' எண்டு காட்டத்தான் உந்த வீடியோ எடுபட்டிருக்கு. ஆறு வருசத்துக்கு முந்தின சம்பவம் எண்டதால அப்பிடி கடிதம் கேக்கவெண்டு வந்து இப்பிடிக் களவா வீடியோ எடுத்த ஆளை சிவாஜியாருக்கும் நினைவிருக்குமோ தெரியாது. ஆனால் இது அரசாங்கத்தின்ர ஆக்கள் செய்தவேலை எண்டது மட்டும் வடிவாத் தெரியுது.**

**வீடியோ எடுக்கப் போனவர் சிவாஜிலிங்கத்தாரை மடக்க மாறிமாறி வலையைப் போட்டாலும், சிவாஜியர் அதுகளுக்க மாட்டுப்படேலை. எங்கட அரசியல்வாதிமார் காசுக்காகத்தான் இப்பிடி ஆமிப்பிரச்சினை எண்டு கடிதம் குடுக்கினம் எண்டதை சிவாஜியாரின்ர வாயால வரப்பண்ணத்தான் வீடியோ எடுத்த ஆள் போயிருக்கும். ஆனால் 'எனக்கு ஒண்டும் வேண்டாம். பாதிக்கப்பட்ட சனத்துக்கு உங்கட சொந்தக்காரரின்ர கையால ஏதும் குடுங்கோ' எண்டு ஒரேபோடாப் போட்டிருக்கிறார். அதோட இஞ்ச ஆமிப்பிரச்சினை இல்லையெண்டும் அவர் சொல்லேல. ஆனால் வெளிநாடு போகப்போற ஆள் இந்தப் போராட்டம், ஆமிப்பிரச்சினைக்குள்ள சிக்குப்படாத ஆள் எண்டாலும் இஞ்சயுள்ள பிரச்சினையை அவரோட ஜொயின்ட் பண்ணி கடிதம் தரலாம் எண்டுதான் சொல்லியிருக்கிறார். அதால இஞ்ச ஆமியின்ர கெடுபிடி, பிரச்சினையள் இல்லையெண்டு பிரசாரம் செய்யவும் இந்த வீடியோவைப் பாவிக்க ஏலாது எண்டதால தான் இவ்வளவுகாலமும் வைச்சிருந்திட்டு, இப்ப விட்டிருக்கினம். 'நானும் ஆவாதான்' எண்டு தன்னைத் தானே ரவுடி எண்டு சொல்லி, கிட்டடியில அடிபிடி கேஸ் ஒண்டில உள்ளுக்க தள்ளுப்பட்ட அரச உளவாளிச்சித்துக்காரர் இந்த வீடியோவை வெளியில விட்டிருக்கிறார் எண்டு சொல்லுப்படுகுது. இந்த வீடியோவால சிவாஜிலிங்கத்தாருக்கு கெட்டபேர் வருமெண்டு நினைச்சுதான் விட்டவை, ஆனாலும் அதுக்கு மாறா சிவாஜியாருக்கு ஆதரவெல்லோ பெருகுது.**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயக விரோத ஆட்சி; மேதின பேரணியில் திரள்க

### *மாக்சிச லெனினிச கட்சி அழைப்பு*

வவுனியா, மே 1

ரணில் ஆட்சியின் ஜனநாயக விரோதப் போக்குகளைக் கண்டித்து வவுனியாவில் இடம்பெறவுள்ள மேதினப் பேரணியில் அணிதிரளுங்கள் என புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சியின் வன்னிமாவட்ட செயலாளர் நி.பிரதீபன் அழைப்பு விடுத்துள்ளார்.

மாக்சிச லெனினிச கட்சியின் மேதின நிகழ்வுகள் வவுனியாவிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாட்டை நெருக்கடி நிலைக்கு இட்டுச் செல்லப்பட்டமை, பயங்கரவாத எதிர்ப்புச்சட்ட வரைவு நடைமுறையாக்கல் உள்ளிட்ட ஜனநாயக விரோதப் போக்குகள் ரணில் ஆட்சியில் நீடிக்கின்றது.

இந்த ஜனநாயக விரோதச் செயற்பாடுகளைக் கண்டித்து மேதினமான இன்று காலை 9.30 மணிக்கு வவுனியா தமிழ்மத்திய மகாவித்தியாலயத்துக்கு முன்பாக பேரணி ஆரம்பமாகி வவுனியா மாநகர சபை மண்டபத்தை அடையும். முற்பகல் 10.45 மணிக்கு நகரமண்டபத்தில் மேதினக்கூட்டம் இடம்பெறும்.

இதில் அனைவரும் அணிதிரண்டு அரசுக்கு எதிர்ப்பு வெளியிடவேண்டும் என அழைப்பு விடுத்தார். (ச-110)

# சீனன்குடா விமானத் தளத்தில் இந்திய உதவியுடன் மண்டபம்

கொழும்பு, மே 1

இந்திய அரசின் உதவியின்கீழ் திருகோணமலை சீனன்குடா விமானத் தளத்தில் 250 மில்லியன் ரூபா செலவில் மண்டபம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

4 நாள் பயணமாக இந்த வாரம் இலங்கைக்கு வரவுள்ள இந்திய விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் விவேக் ராம் சௌதாரி இதற்கான அடிக்கல்லை நடவுள்ளார்.

இவரது பயணத்தின்போது இவர் இலங்கையிலுள்ள விமானப் படைப் பயிற்சி முகாம்கள் பலவற்றுக்கும் சென்று அங்கு இடம்பெறும் பயிற்சி நடவடிக்கைகளையும் பார்வையிடவுள்ளார்.

இலங்கை விமானப்படைத் தளபதி கப்டன் துஷான் விஜேசிங்க இந்தத் தகவலை உறுதி செய்துள்ளார். (எ-6)

## மன்னார் தமிழ்ச் சங்கம் புதிய நிர்வாகத் தெரிவு

மன்னார், மே 1

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

புதிய தலைவராக வி.எஸ்.சிவகரன், செயலாளராக தோமஸ் மரியதாஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தமிழ்மொழி வளர்ச்சியில் தசாப்தகாலத்துக்கும் மேலாக சேவையாற்றும் மன்னார் தமிழ்ச் சங்கத்தில் பணியாற்ற ஆர்வமுடையவர்கள் முன்வாருங்கள் என மன்னார் தமிழ்ச் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது. (ச-213)



## பசுமை மேதின பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மே 1

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் செம்பசுமை மேதினப் பொதுக்கூட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்றத்தில் இடம்பெறவுள்ளது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் இணைப்பாளர் பார்த்தீபன் தலைமையில் கூட்டம் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல் துறைத் தலைவர் பேராசிரியர். கே.ரி.கணேசலிங்கம், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன், அரசியல், சமூக ஆய்வாளர் எம்.நிலாந்தன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகள் நிகழ்த்தவுள்ளனர். (ச-66)



# சோபகிருது

## தமிழ்ப் புத்தாண்டுப் பலன்கள்



### மகரம்

கனிவான பேச்சால் எல்லோரையும் வழிநடத்தும் முன்னோடி நீங்கள். சோபகிருது புத்தாண்டு உங்கள் ராசியிலேயே பிறக்கிறது. குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். சுபநிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். வட்டிக் கடனை மொத்தமாக அடைக்கும் அளவுக்கு வருமானம் உயரும்.

சித்திரை, வைகாசி மாதங்களில் எதிர்பார்த்த பணம் வரும். தடைப்பட்ட காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். மனஉளைச்சல், பதற்றம் அதிகரிக்கும். யாரை நம்பியும் பெரிய முடிவுகள் எடுக்கவேண்டாம். வீண் விவாதங்களும், அலைச்சலும் வரக்கூடும்.

14.4.2023 முதல் 21.4.2023 வரை குரு பகவான் 3ஆம் வீட்டில் மறைந்திருப்பதால், சில காரியங்களைப் பலமுறை முயன்று முடிக்கவேண்டிவரும். இயல்புக்கு மாறான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாம். 22.4.2023 முதல் வருடம் முடியும் வரை, குரு உங்கள் ராசிக்கு 4ஆம் வீட்டில் அமர்வதால் வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். வீடு கட்டும் பணி தாமதமாகும்.

14.4.2023 முதல் 25.8.2023 வரை மற்றும் 20.12.23 முதல் வருடம் முடியும் வரை பாதச்சனி தொடர்வதால் திடீர் பயணங்கள், செலவுகள் அதிகரிக்கும். 26.8.2023 முதல் 19.12.2023 வரை ஜன்மச்சனி இருப்பதால் சலிப்பு, சோர்வு வந்து நீங்கும். உடல்நலனில் கவனம்.

ஆண்டின் தொடக்கம் முதல் 7.10.23 வரை ராசிக்கு 4இல் ராகு நிற்பதால் தாயாருக்கு மருத்துவச் செலவு, தாய்வழி உறவினர்களிடையே பகைமை வரக்கூடும். உத்தியோகத்தில் பதற்றம், காரியத்தடைகள் வரும்.

8.10.2023 முதல் வருடம் முடியும்வரை ராகு 3இல் நுழைவதால் எதிலும் வெற்றி உண்டாகும். வீடு கட்ட வங்கிக் கடன் உதவி கிடைக்கும். கேது 9இல் நுழைவதால் இதுவரை உத்தியோகத்தில் பிரச்சினைகள் குறையும். 3.5.2023 முதல் 30.5.2023 வரை சுக்ரன் 6இல் மறைவதால் சிறுசிறு வாகன விபத்துக்கள் வந்து நீங்கும். 2.7.2023 முதல் 19.8.23 வரை செவ்வாய் 8இல் மறைதனால் மனஇறுக்கம், வீண்பயம், காரிய தாமதம் உண்டாகும்.

**வியாபாரிகளே!** எதிலும் கவனமாக தடம் பதிப்பீர்கள். சுய யோசனைப்படி செயற்படுவீர்கள். ஐப்பசியில் இலாபம் உண்டு.

**உத்தியோகஸ்தர்களே!** ஆவணி, புரட்டாசி, ஐப்பசி மாதங்களிலும் சாதகமான சூழ்நிலை உருவாகும். பதவி உயர்வும், சம்பள உயர்வும் நிறைவேறும். கணினித் துறையினருக்கு வேலைச் சுமை அதிகரிக்கும்.

**மொத்தத்தில் இந்தப் புத்தாண்டு, செலவு மற்றும் அதீத பணிச்சுமையைத் தந்தாலும் வெற்றியையும் மகிழ்ச்சியையும் உரிய பலனாகப் பெற்றுத் தரும்.**

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** தாயின் விருப்பங்களை நிறைவேற்றி மகிழ்வீர்கள். பிள்ளைகள் மூலம் வீண் பிரச்சினைகளும் செலவுகளும் ஏற்படக்கூடும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**இடபம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மிதுனம்** மகிழ்ச்சியான நாள். மனதில் தைரியம் அதிகரிக்கும். எடுத்த காரியத்தைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**கடகம்:** முயற்சிகள் சாதகமாக முடியும். சங்கடங்கள் ஏற்பட்டாலும் அதனால் பாதிப்பு எதுவுமிருக்காது. செலவுகள் ஏற்படும். பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். பேசும்போது பொறுமை அவசியம்.

**சிம்மம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். முயற்சிக்கு ஆதரவு கிடைக்கும்.

**கன்னி:** பணவரவு திருப்தி தரும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**துலாம்:** உற்சாகம் ஏற்படும். காரி எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடிவதற்கு வாய்ப்பு ஏற்படும். அனுகூலம் உண்டாகும். பணவரவு மகிழ்ச்சி தரும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். செலவு செய்ய நேரிடும். மற்றவர்களுடன் வீண் விவாதத்தில் ஈடுபட வேண்டாம்.

**தனுசு:** மனதில் உற்சாகம் அதிகரிக்கும். விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். சுப நிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை சாதகமாக முடியும்.

**மகரம்:** எதிர்பாராத பணவரவு இருந்தாலும் திடீர் செலவுகளும் ஏற்பட்டு திக்கு முக்காட வைக்கும். காரியம் இழுபறியாகும். மன வருத்தம் ஏற்பட வாய்ப்புண்டு.

**கும்பம்:** உற்சாகமான நாள். காரியங்கள் அனுகூலமாகும். உங்கள் பொறுப்புகளை வாழ்க்கைத்துணை பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும்.

**மீனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு எதிர் பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. குழப்பங்கள் நீங்கும். தேவைகளை பூர்த்தி செய்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரியாத புதிர்?

வடமேல் மாகாண ஆளுநரும், சிறிலங்கா கடற்படையின் முன்னாள் தளபதியுமான வசந்த கரன்னகொடவையும் அவரது குடும்பத்தாரையும் அமெரிக்கா கறுப்புப்பட்டியலில் இணைத்துள்ளது. அமெரிக்காவின் இந்த நகர்வு புதியதல்ல. இதற்கு முன்னர் முன்னாள் இராணுவத் தளபதிகளான சரத் பொன்சேகா மற்றும் சவேந்திர சில்வா ஆகியோருக்கும் அமெரிக்கா இத்தகைய தடைகளை விதித்துள்ளது.

ராஜபக்சக்களின் முதலாவது ஆட்சியில் அதாவது 2005 தொடக்கம் 2010ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில், பாடசாலை மாணவர்கள் உட்பட 11 பேர் 2008ஆம் ஆண்டில் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டமை தொடர்பான வழக்கில், வசந்த கரன்னகொட பிரதான சந்தேகநபராகப் பெயரிடப்பட்டிருந்தார். நல்லாட்சி அரசின் காலத்தில் மேற்படி வழக்கு இழுத்தடிப்புச் செய்யும் வகையில் நகர்ந்தது. இதன்போது கடத்தப்பட்டவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்பதுவரையிலான தகவல்கள் புலன்விசாரணையில் வெளிப்படுத்தப்பட்டன. சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் கைதானவர்களின் வாக்குமூலங்களின் அடிப்படையில் முன்னாள் கடற்படைத் தளபதியை சந்தேகநபராகப் பெயரிடுவதற்கான ஆதாரங்களும் முன்வைக்கப்பட்டன. ஆனால், கோத்தாபய ராஜபக்சஜனாதிபதியாகத் தெரிவாகியதும் கரன்னகொடவுக்கு ஆளுநர் என்கின்ற பாதுகாப்புக் கவசத்தை அணிவித்தார். அதன் பின்னர் சட்டமாஅதிபர் திணைக்களமும் மேற்படி வழக்கில் கரன்னகொடவை சந்தேகநபர் என்ற நிலையிலிருந்து நீக்கியது. இலங்கையின் நீதிப்பொறிமுறை – உள்ளகப் பொறிமுறை மூலம் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி நிலைநாட்டப்படாததைத் தொடர்ந்து கரன்னகொட இப்போது உலகளாவிய நீதி நியாயாதிக்கத்தின்கீழ் அமெரிக்காவால் கறுப்புப் பட்டியலுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளார்.

வழமைபோன்று அமெரிக்காவின் இந்தத் தடைக்கு இலங்கை எதிர்ப்பு வெளியிட்டிருக்கின்றது.

'முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொடவை உரிய நடைமுறைகளைப் பின்பற்றாமல் அமெரிக்கா கறுப்புப் பட்டியலில் இணைத்துக் கொண்டுள்ளது. அமெரிக்காவின் இந்தத் தீர்மானம், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை நிவர்த்தி செய்வதில் சிறிலங்கா எடுத்துள்ள முழுமையான அணுகுமுறைக்கு எதிரானது. அத்துடன், இலங்கையின் ஜனநாயக ஆட்சி மற்றும் நல்லிணக்கக் கட்டமைப்புகளை வலுப்படுத்துவதில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள உறுதியான முன்னேற்றத்தின் பின்னணியில், இந்த அறிவிப்பு மேற்கொள்ளப்பட்டிருப்பது துரதிர்ஷ்டவசமானது. இவ்வாறான சவால்களுக்கு மத்தியிலும், நல்லிணக்கம், பொருளாதார மீட்சி மற்றும் சமூகப் பொருளாதார மேம்பாட்டை அடைவதற்கான தொடர்ச்சியான முயற்சிகளை சிறிலங்கா அரசாங்கம் முன்னெடுக்கும்' என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டுள்ளார்.


பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை நிலைநாட்டுவது நல்லிணக்கத்துக்கு எதிரானது என்று அலி சப்ரி குறிப்பிடுகின்றார். அப்படியென்றால் இலங்கையில் நல்லிணக்கத்தை எப்படி நிலைநாட்டப்போகின்றார்கள்? அடுத்தது இலங்கையின் உள்ளகப்பொறிமுறை – நீதிப்பொறிமுறை ஊடாக மாணவர்கள் உட்பட 11பேர் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட வழக்கில் நீதி நிலைநாட்டப்பட்டு குற்றவாளி தண்டிக்கப்பட்டிருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காதே? இவை எல்லாவற்றுக்கும் அப்பால் தமிழர் தரப்பு தொடர்ச்சியாக வலியுறுத்தும் ஓர் விடயமும் இங்கே நிரூபணமாகியிருக்கின்றது. குற்றங்களை இழைத்ததரப்பே விசாரணைகளை முன்னெடுப்பது இயற்கை நீதிக்கு முரணானது. எனவே உள்ளகப் பொறிமுறை ஊடான விசாரணை வேண்டாம். சர்வதேச விசாரணையே தேவை என்பதே அந்த வலியுறுத்தல். அதை அலி சப்ரியின் கருத்து உறுதிப்படுத்தியிருக்கின்றது. இலங்கையில் உள்ளகப்பொறிமுறை ஊடான விசாரணை முன்னெடுக்கப்படின் கரன்னகொட போன்ற பிரதான சூத்திரதாரிகள் தப்பிப்பார்கள் அல்லது தப்பவைக்கப்படுவார்கள். எப்போதும் தமது பாதுகாப்புத் தரப்பினரைக் காப்பதிலேயே ஆட்சியாளர்கள் கவனம் செலுத்துகின்றனர். யார் ஆட்சிக்கு வந்தாலும் அதுவே நடக்கின்றது.

உள்ளகப்பொறிமுறை எப்படி இருக்கும் என்பதற்கான அளவீடாக இதை எடுத்துக்கொள்ளலாம். ஆனால், இவ்வாறு உள்ளகப்பொறிமுறையின் சீத்துவம் வெளிப்படுவது இதுதான் முதல்தடவையுமல்ல. இதனை நன்கு புரிந்துகொண்டபின்னரும்கூட, சர்வதேச சமூகம் மீண்டும் மீண்டும் உள்ளகப்பொறிமுறை ஊடாகவே தீர்வைக்காணுங்கள் என்று சொல்வதுதான் புரியாத புதிராக இருக்கின்றது.

## நாளொரு நல்வார்த்தை

போராடிக் கிடைக்கும்
தோல்விகூட கொண்டாடப்பட
வேண்டிய வெற்றி தான்...

- மகேந்திர சிங் டோனி




# கரன்னகொட விவகாரத்தில் இலங்கையின் முகம் அம்பலம்

## சாடுகின்றார் எம்.ஏ.சுமந்திரன்

**கொழும்பு, மே 1**

**கடற்படை முன்னாள் தளபதி வசந்த கரன்னகொடவை நியாயப்படுத்தும் அரசாங்கத்தின் செயற்பாடு, எதிர்காலத்தில் நிறுவப்படவுள்ள உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மை தொடர்பில் சந்தேகத்தைத் தோற்றுவிக்கின்றது. அவ்வாறான உள்ளகப் பொறிமுறையை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டோம்.**

இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நல்லிணக்க செயன்முறைக்கு வெளிவிவகார அமைச்சு பொறுப்பாக இருக்கும் அதேவேளை, அமைச்சர் அலி சப்ரி இலங்கையில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்குவதற்குரிய சட்டவரைவைச் சமர்ப்பிக்கவுள்ளார்.

ஆனால், நல்லிணக்க செயன்முறையில் இலங்கையின் தலைமைத்துவம் மற்றும் அதன் நடவடிக்கைகள் தொடர்பாக நாம் எமது அதிருப்தியைத் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றோம்.

வசந்த கரன்னகொடவுக்கு எதிராக விதிக்கப்பட்ட தடைக்குக் கவலையை வெளிப்படுத்தி, அவரை நியாயப்படுத்துகின்ற இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடு, இதுவரை காலமும் கூறிய விடயங்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றது.

சுயாதீனமானதும், மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானதுமான உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்குவதாயின், அது இலங்கையர்களை உள்ளடக்கிய உள்ளகப் பொறிமுறையாக அமையக்கூடாது. மாறாக சர்வதேச நிபுணர்களை உள்ளடக்கிய பொறிமுறையாகவே அமையவேண்டும் - என்றார். (ஏ-இ)

# தமிழ்க் கட்சிகளின் ஆட்டத்துக்கு ஆடமுடியாது

## பொதுமுடக்கம் தொடர்பில் அமைச்சர் பந்துல சீற்றம்

வடக்கு- கிழக்கிலுள்ள தமிழ்க் கட்சியினர் நாட்டைப் பிளவுபடுத்துவதிலேயே குறியாகவுள்ளனர். அவர்களின் ஆட்டத்துக்கு ஆடமுடியாது என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன சீற்றத்துடன் தெரிவித்தார். தமிழ் மக்களை உசுப்பேத்தி விடுவதுதான் தமிழ்க் கட்சியினரின் அன்றாட தொழிலாகவுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில் கடந்த 25ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட பொதுமுடக்கம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ்க் கட்சிகள் தங்கள் சுயலாப அரசியலை முன்னெடுத்து வருகின்றனர். பொதுமுடக்கப் போராட்டங்கள் மூலம் எதையும் சாதிக்கமுடியாது என்றும், தமிழ்மக்களை ஏமாற்றவே இப்படியான போராட்டங்களைத் தமிழ்க் கட்சியினர் நடத்துகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஒ-22)

**நாளை**
02.05.2023
செவ்வாய்க்கிழமை
சித்திரை 19

| | |
|---|---|
| சுபநேரம் | : 02.57 - 04.27 |
| ராகுகாலம் | : 10.27 - 11.57 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> தற்காலத்திலும் உழைப்பாளர்களுக்கான உரிமைகள் மீறப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றது. மானிடர்கள் உழைப்பது மகிழ்ச்சியாக இருப்பதற்குத் தான் ஆனால், நாள் முழுவதும் வேலைப் பார்த்துக் கொண்டிருக்கும் உழைப்பாளர்களுக்கு மகிழ்ச்சி என்பது எட்டாக் கனியாகவே உள்ளது.

# உழைப்பின் பெருமிதம்!

ஞா. த்ரிஷா



மக்களின் அடையாளமாக விளங்கும் உழைப்பாளர் தினம். பெரும் தலைவர்களுக்கு மட்டுமே சிலையும் அவர்களுக்கு என சிறப்பான தினமும் கொண்டாடப்பட்டு வரும் நிலையில் வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள மனிதர்களுக்கும் இந்த நாட்டையே தனது தோளில் சுமந்து நிற்கும் உழைப்பாளர்களுக்கு ஓர் அங்கீகாரம் கிடைக்கவேண்டும் என்று கொண்டாடப்படும் ஒரு தினம்தான் உழைப்பாளர் தினம்.

### எவ்வாறு உருவானது?

முன்பு எல்லா மக்களும் இடைவெளி இல்லாமல் உழைத்து கொண்டேதான் இருந்தார்கள். அதனை எதிர்க்கும் விதமாக அமெரிக்காவில் எட்டு மணிநேரம் வேலை, எட்டு மணிநேரம் ஓய்வு மற்றும் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்கவேண்டும் எனப் போராடத் தொடங்கினார்கள். இந்தப் போராட்டம் 1886ஆம் ஆண்டு நடந்தது. இதில் பல இலட்சம் தொழிலாளர்கள் கலந்துகொண்டு போராடினர். இதில் பல உழைப்பாளர்கள் கொல்லப்பட்டனர். பின்னர் தொழிலாளர்கள் இந்த நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானவர்கள் என்பதை உணர்ந்து உழைப்பாளர்கள் ஒன்று திரண்டு போராடி வெற்றி கண்டனர். உழைப்பாளர்கள் ஒன்றுபட்ட தினத்தை போற்றும் விதமாகவும், தொழிலாளர்களின் முக்கியத்துவத்தை போற்றும் விதமாகவும் உலக தொழிலாளர்கள் தினம் மே முதலாம் திகதி கொண்டாடப்பட்டு வருகின்றது.

தற்காலத்திலும் உழைப்பாளர்களுக்கான உரிமைகள் மீறப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றது. மானிடர்கள் உழைப்பது மகிழ்ச்சியாக இருப்பதற்கு தான் ஆனால் நாள் முழுவதும் வேலைப் பார்த்துக் கொண்டிருக்கும் உழைப்பாளர்களுக்கு மகிழ்ச்சி என்பது எட்டாக் கனியாகவே உள்ளது.10 'இந்த உலகம் ஒவ்வொரு நொடியும் இயங்குவதற்கு மனிதனின் உழைப்பு இன்றியமையாததாகும்' என்ற கருத்து நடைமுறையில் சாத்தியமாகவே இருக்கின்றது. கடின உழைப்பின் மூலம் இந்த உலகில் சாதித்து தன் வாழ்வில் முன்னேறிய பலரையும் ஒவ்வொரு துறையிலும் காணக்கூடியதாக இருப்பதுடன் கஷ்டப்பட்டு உழைத்தும் தங்களுடைய பொருளாதார நிலை உயராத மக்கள் கோடிக் கணக்கானோர் இருக்கின்றனர். இதற்கான காரணம் என்ன? மக்களின் உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்கப்படாமை, மக்களின் உழைப்பை சுரண்டும் வகையிலான பல கம்பனிகளின் தந்திரோபாய மூளை, ஒரு சமூகம் இப்படித்தான் இருந்தது, இனியும் அப்படியேதான் இருக்க வேண்டும் என்ற சிந்தனை கொண்ட சமூகப் பிராணிகளின் செயல், வரவுக்கு மீறிய செலவு, சேமிப்பின்மை, முறையான ஒரு திட்டமிடல் இல்லாத அநாவசிய செலவினங்கள் போன்ற பல்வேறு காரணங்களால் மக்களின் வாழ்க்கைத் தரம் குறைந்த நிலையிலேயே உள்ளது.

இவ்வாறான நெருக்கடியான ஒரு சூழலில் வாழ்க்கையை நடத்தும் மக்களுக்கு மேலும் கஷ்டத்தை உருவாக்குவதற்கும் அவர்களின் இலாபத்தை ஈட்டிக் கொள்வதற்காகவும் பல்வேறு உற்பத்தி நிறுவனங்கள் மக்களை இலக்காகக் கொண்டு தந்திரோபாயமான பல செயற்பாடுகளைச் செய்து வருகின்றன. அதுபோலவே மதுசார கம்பனிகளும் எம்மை ஏமாற்றி உழைப்பின் ஒரு பகுதியை சூறையாடுகின்றனர். இவ்வாறான நிலை எவ்வாறு ஏற்பட்டது என சற்றுச் சிந்தித்துப் பார்ப்போம். சாராயக் கம்பனிகள் தனது உற்பத்தியை பெருக்கி கொள்வதற்காக சமூகத்தில் பல போலி மூடநம்பிக்கைகளைப் பரப்பியுள்ளது. அவற்றுள் ஒன்றுதான், கஷ்டப்பட்டு உழைத்தால் ஏற்படும் உடல் கஷ்டம் சாராயம் குடித்தால் நீங்கும் என்ற அக் கருத்தின் உண்மை தன்மையை ஆராய்வோம். சாராயம் குடித்த ஒரு நபரை நன்கு அவதானித்தால் அந்நபரின் உடற்களைப்பும் அசௌகரியமும் அதிகரித்துள்ளதா? குறைந்துள்ளதா? மறுநாள் வேலைக்கு சுறுசுறுப்பாக செல்கின்றாரா? சாராயம் குடிக்காதோர்களுக்கு உடற்களைப்பு நீங்குவதில்லையா? சாராயம் என்பது உடலுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் திரவமாகும், சாராயம் உடற்களைப்பையும் அசௌகரியத்தையும் அதிகரிக்கும். இதைத் தொடர்ந்து சாராயம் மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது என்ற கருத்தை நோக்குவோம். ஒருவர் சாராயத்தை குடிக்கும்போது அசௌகரியத்துடன்குடிக்கின்றாரா? அசௌகரியத்துடன்குடிக்கின்றாரா? சாராயம் குடித்ததன் பின்னர் மகிழ்ச்சியாகச் செய்ய வேண்டிய செயற்பாடுகளை துடிப்புடன் செய்கின்றாரா? மந்தமாக கஷ்டப்பட்டு செய்கின்றாரா? சாராயத்துக்கு ஏமாந்து குடிப்பவரால் பிறருக்கு மகிழ்ச்சி ஏற்படுகின்றதா? அசௌகரியம் ஏற்படுகின்றதா? இது போன்ற கேள்விகள் எழுப்புவதன் மூலம் உண்மைத் தன்மையை அறிந்துகொள்ளலாம்.

### உழைக்கும் பணத்தில் சாராயத்துக்கு ஏமாந்து குடிப்பதனால் நஷ்டங்கள் ஏற்படுகின்றதா?

ஒருவர் முழுநாளும் கஷ்டப்பட்டு உழைத்து ஆயிரத்து 500 ரூபா சம்பளத்தைப் பெற்றுக்கொண்டபின் உடல் கஷ்டம் என்று ஒரு நாளுக்கு 780 ரூபாவுக்கு சாராயம் குடிக்கின்றார். அவ்வாறு ஒரு வாரத்தில் நான்கு நாள்கள் குடித்தால் 3 ஆயிரத்து 120 ரூபா, ஒரு மாதத்துக்கு 9 ஆயிரத்து 360 ரூபா, ஒரு வருடத்துக்கு 37 ஆயிரத்து 440 ரூபா அண்ணளவாக வீணாகச் செலவிடுகின்றார்.

### இதன் மூலம் நன்மையடைவது யார்?

பிள்ளைகளின், குடும்பத்தாரின் பொருளாதார தேவைகள் சந்திக்கப்படமாட்டாது. குடும்பத்தினரின் மகிழ்ச்சி இல்லாமற் போகின்றது. சாராயம் குடித்துவிட்டு இருப்பவர்களின் வாய்நாற்றம் ஏனையோரை அசௌகரிய உணர்வுக்கு ஆளாக்கின்றது. சாராயம் குடித்துவிட்டு சாராயத்தை காரணம் காட்டி சுயநினைவு இல்லாததைப்போல் நடித்துக் கொண்டு பொது பேருந்துகளில் பயணிக்கும்போது அதில் வேலை முடித்து வரும் பெண்கள், பாடசாலை முடித்து வரும் பிள்ளைகள் எனப் பலரும் பல பிரச்சினைகளுக்கும், நச்சரிப்புகளுக்கும், தொல்லைகளுக்கும் ஆளாகக் கூடிய நிலை ஏற்படுகின்றது.

### இதுபோன்ற நிலையை எவ்வாறு வெற்றிகொள்ளலாம்?

வீணாக சாராயத்துக்குச் செலவிடும் பணத்தை சேமித்தல் அல்லது வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தல். உடற் கஷ்டம் என்று ஏமாந்து சாராயம் குடிப்பவர்களுக்கு அது தொடர்பான உண்மைத் தன்மையை எடுத்துக்கூறல். பிள்ளைகள் சாராயத்துக்காக வீணாகச் செலவழிக்கும் பணத்தை தந்தைக்கு கணக்குப் போட்டுக் காட்டல். மனைவியானவள் வரவுக்கேற்ற செலவை செய்வதுடன் சாராயம் குடிப்பதால் ஏற்படும் இழப்பை பட்டியல் போட்டுக் காட்டல் இவ்வாறான செயற்பாடுகளை சற்று நடைமுறைப்படுத்தி பார்க்கலாம். சிறியவர்கள் முதல் பெரியோர் வரை அனைவரும் உபயோகப்படுத்தும் பொருள் உழைப்பால் வந்தது தான் காலையில் சாப்பிடும் தட்டில் ஆரம்பித்து இரவு உறங்கும் கட்டில் வரை அனைத்தும் தொழிலாளர்களின் உழைப்பில் வந்ததுதான். ஒவ்வொரு நாட்டில் பொருளாதார வளர்ச்சியும் அந்த நாட்டில் உள்ள மக்களின் உழைப்பால் வந்தது. உழைப்பாளர்களைப் போற்றும் விதமாக 'உழைப்பாளி இல்லாத நாடு தான் எங்குமில்லை' என்ற பாடலும் உள்ளது. குறைவாக சம்பளம் வாங்குபவர், அதிகமாகச் சம்பளம் வாங்குபவர் என்ற பிரிவினை இன்றி திருட்டு, பொய், சட்டத்துக்குப் புறம்பான செயல் எதுவும் செய்யாமல் பார்க்கும் எந்தவொரு வேலையும் உயர்வானதே! மகத்தான உழைப்பில் இருந்து பெறும் ஊதியத்தை வீணாக செலவழிக்காது முறையாக திட்டமிட்டுச் செலவிட முயற்சி செய்வோம்.





## ஆயிரமாயிரம் உரிமை மீட்ட மே தினம்

ஏதினி அடிமை வர்க்கம்
எனக்குரல் உயர்த்தி வந்த
'மே திகதி' வாழ்க மண்ணில்
மேலவர் கீழ்வரென்ற
ஆதிக்கம் செய்து வாழ்ந்த
ஆணவம் அழிந்த அந்நாள்
மேதினி போற்றி வாழ்ந்தும்
'மே' நாளே அந்நாள் அன்றோ...!

வியர்வையின் துளிகளே எம்
விழாநாளே மேநாள் கைகள்
உயர்வினை உரத்துக் கூறும்
ஒப்பற்ற நாளே இந்நாள்
அயர்வின்றி உழைப்போனுக்கே
ஆயிரம் உரிமை மீட்ட
உயர்வான மேல்நாள் மேநாள்
ஒப்பில்லா இந்நாள் வாழ்க

நாட்டினில் சமுதாயத்தில்
நலநீதி கிடைப்பதற்குத்
தீட்டிடும் திட்டம் வேண்டும்
சிந்தனை மாறல் வேண்டும்
விழலுக்கு நீரைப் பாய்ச்சும்
வேதனை ஓட வேண்டும்
உழைப்பவன் உயர வேண்டும்
ஒற்றுமை தழைக்க வேண்டும்

மதுரகவி காரை.
எம்.பி.அருளாநந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் சிங்கள தமிழ் புத்தாண்டு நிகழ்வு கடந்த 14ஆம் திகதி சிறப்பாக இடம்பெற்றது. நிகழ்வில் பணிஸ் உண்ணுதல், தேசிக்காய் கரண்டி, முட்டி உடைத்தல், யானைக்கு கண் வைத்தல், கயிறிழுத்தல் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. (ய-19)





## சந்நிதியான் ஆச்சிரமத்தில் உதவிகள் வழங்கி வைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 26

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் பல்வேறு உதவிகள் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் தலைமையில் அண்மையில் வழங்கப்பட்டன.

கோப்பாய் மத்தியில் இயங்கிவரும் நவ மங்கை நிவாசம் இலவசக் கல்வி நிலைய ஆசிரியர்களுக்கு சித்திரை மாதக் கொடுப்பனவாக முதலாம் கட்டமாக 50 ஆயிரம் ரூபா கல்வி நிலைய நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்பட்டது.

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு மருத்துவ உதவியாக 25 ஆயிரம் ரூபாவும், கெருடாவில் தெற்கு தொண்டைமானாறைச் சேர்ந்த விவேகானந்தா முன்பள்ளியின் விளையாட்டு நிகழ்வுக்காக 38 மாணவர்களுக்கு 25 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களும், உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன. (ம-14-66)

கிளிநொச்சி - ஸ்கந்தபுரம் சமுர்த்தி வங்கியின் புதுவருட விளையாட்டு விழா, ஸ்கந்தபுரம் விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. சமுர்த்தி வங்கி முகாமையாளர் பி.கோகுலவாணி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச்செயலக சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்கள கணக்காளர் ப.கஜேந்திரன் கலந்துகொண்டார். (ம-14-159)





நீர்வேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தால், கடந்த 2021ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு கௌரவிப்பு நிகழ்வு, சங்க மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. (14-9)



கொடிகாமம் - சரசாலை இலந்தைத்திடல் சிறீ வீரமாகாளி அம்பாள் ஆலய அறப்பணி நிதியத்தினால் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான மருந்துப் பொருள்கள் கொடிகாமம் பிரதேச மருத்துவமனைக்கு கடந்த 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டது.

கொடிகாமம் பிரதேச மருத்துவமனை பொறுப்பு மருத்துவ அதிகாரி எஸ்.பிரசன்னாவிடம் ஆலயச் செயலாளர் வை.விஜயகுமாரன் வழங்கி வைத்தார். (ய-159)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரங்கக் கருத்தாடல் இன்று

திருமறைக் கலாமன்றத்தின் இலக்கிய அவையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அரங்கக் கருத்தாடல் நிகழ்வு இன்று திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு, இல.286 பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

'இந்தியத் தமிழ் நாடகங்களின் சமகாலப் போக்குகள்' என்னும் கருப்பொருளில் இடம்பெறவுள்ள கருத்தாடல் நிகழ்வில், தமிழகத்தின் அரங்கச்செயற்பாட்டாளரும் புதுச்சேரி, யாழ்.அரங்கம் மற்றும் ஆய்வு நிறுவனத்தின் இயக்குநருமான கலாநிதி ஞா.கோபி கலந்து கொண்டு கருத்துரையை வழங்கவுள்ளார். தொடர்ந்து கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது. ஆர்வமுள்ள அனைவரையும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

(ஒ-இ)


## 46 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### குமரையா தேவராஜன்



தோற்றம்
05.07.1950

மறைவு
01.05.1977

நினைவுகள் மாறவில்லை
ஞாபகங்கள் ஒழி வதில்லை
உன் வழிவந்த பாசப்பறவை
களில் என்றும் நித்தியத்திற்கும்
நிரந்தமாய் நீ வீற்றிருப்பாய்
உன் நினைவுகளில் வாழும்

திருமதி தேவராஜன்
டீல் தேவராஜன் - ஜெசிதேவராஜன்
சன்றல் தேவராஜன்
சஞ்சேஸ் தேவராஜன்
சவ்றோ தேவராஜன்

சசிதேவராஜன் நிருபாதேவராஜன்
ராஜன் தேவராஜன்
ஜெயல்டன் தேவராஜன்
அஸ்ரன் தேவராஜன்
உற்றார் உறவினர்

சோமசுந்தரம் அவனியு
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.



## மணமக்கள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கனடாவில் வசிக்கும் மணமகளுக்கு, கனடாவில் வசிக்கும் மணமகனும், லண்டனை வசிப்பிடமாகக் கொண்ட மணமகளுக்கு ஐரோப்பாவில் வசிக்கும் மணமகன் தேவை.

தொடர்பு: 0044 7809 892218

(cs 50103) (N-1)


# மகளைக் கொன்று தந்தை தன் உயிரையும் மாய்ப்பு!

தனது மகளைக் கத்தியால் வெட்டிக் கொலை செய்த தந்தையொருவர் தன் உயிரையும் மாய்த்துக் கொண்ட சம்பவம் மொனராகலை பொலிஸ் பிரிவில் நடந்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. 17 வயதுச் சிறுமியே வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

மகளின் காதல் விவகாரத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தே தந்தை மகளை வெட்டினார் என்று பொலிஸ் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொலையைப் புரிந்த குடும்பஸ்தர், வீட்டுக்கு அருகிலுள்ள காணிக்குச் சென்று தூக்கிட்டு தற்கொலை செய்தார் என்றும் பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

49 வயதான குறித்த குடும்பஸ்தர் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர் என்றும், அவர் முன்னாள் இராணுவச் சிப்பாய் என்றும், மகளின் காதலன் இராணுவத்தில் கடமையாற்றுகின்றார் என்றும் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மொனராகலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(எ-22)


## அறை வாடகைக்கு

யாழ்நகருக்கு அண்மையாக படிக்கும் / வேலை செய்யும் பெண்களுக்கு அறை வாடகைக்குண்டு.

ஆனந்தன் 074 000 9644

(cs 50255) A(N-1)



## 4 ஆம் ஆண்டு நினைவலைகள்

### திரு. பொன்னையா சிவராசசிங்கம்

(ஓய்வுபெற்ற இ.போ.சாரதி)

பிறப்பு 06.11.1954 இறப்பு 15.04.2019



திதி: வளர்பிறை ஏகாதசி

பாசத்தின் உறைவிடமே
பண்பின் ஒளி விளக்கே
உள்ளவர் சுற்றமும்
கூடிக் கழித்த உறவுகளை
கைவிட்டு சென்றதேனோ
பிரிவால் வாடி நிற்கின்ற
உள்ளங்கள் தேற்ற
- மொழியின்றி
தவிக்கின்றதே ஈரிரண்டு
ஆண்டாய் நின் உறவின்
அடி தேடி துடிக்கின்றதே.

கேணியடி வீதி,
மீசாலை மேற்கு, மீசாலை.

(Cs 39757) (N-1)

என்றும் நினைவில்
குடும்பத்தினர்



## மூன்றாம் ஆண்டு நினைவு தின அழைப்பு



கடந்த 05.05.2020 அன்று இறைவனடி சேர்ந்த
எமது குடும்பத் தலைவி

அமரர் திருமதி
### தனலக்சுமி சரவணமுத்து

தோற்றம் 30.06.1937 மறைவு 05.05.2020

திதி: திரயோதசி (03.05.2023)

அன்னாரின் 3 ஆம் ஆண்டு நினைவு கிரியைகள் நாளை மறுதினம் (03.05.2023) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.
077 400 4026

பிள்ளைகள்
சரவணமுத்து குடும்பம்

(cs 50254) (N-1)



உ
சிவமயம்

அன்புடையீர் !

## திருமண வரவேற்பு உபசார அழைப்பு

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசாமி கோயில்
ஆதீனப் பேரரசு மஹாராஜஸ்ரீ
து.ஷ. இரத்தினசபாபதிக் குருக்கள்
கலாவதியம்மா தம்பதியரின்
கனிஷ்ட புத்திரி சௌபாக்கியவதி
அனு (எ) குருப்பிரியா B. Sc.,
அவர்களுக்கும்



ஸ்ரீ R. ராகவன் சங்கரி
தம்பதியரின்
கனிஷ்ட புத்திரன் சிரஞ்சீவி
கார்த்திக் (எ) கார்த்திகேயன் B. Sc.,
அவர்களுக்கும்

திருவருள் துணை கொண்டு தென்னிந்தியா, தமிழ்நாட்டில் இனிதே நடந்தேறிய திருமண வைபவத்தை முன்னிட்டு புதுமணத் தம்பதிகளை வரவேற்று உபசாரம் செய்ய மாவைக்கந்தன் அனுக்கிரகம் கைகூடி இருப்பதனால், நிகழும் சோபகிருது வருடம் சித்திரை மாதம் 20 ஆம் நாள் **(03.05.2023) புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு** மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசாமி கோயில் வளாகத்தில் அமைந்துள்ள **"அக்ரஹாரம்"** எனப்படும் **ஆதீனகர்த்தா இல்லத்தில்** வரவேற்பு உபசாரம் நடைபெறவிருப்பதனால் தாங்கள் தங்கள் இஸ்டமித்திர பந்துக்களுடன் குடும்ப சகிதம் முன்னதாகவே வருகை தந்து புதுமணத் தம்பதிகளை ஆசீர்வதித்து விருந்துபசாரத்தில் பங்குபற்ற வேண்டுமாய் இத்தால் அன்புடன் அழைத்து வரவேற்கின்றோம்.

**இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாகக் கருதி மணமக்களை அனைவரும் வந்து வாழ்த்தும் படி அன்புடன் அழைக்கின்றோம்**

**தங்கள் வரவை இனிதே நாடும்**

ஸ்ரீ R.ராகவன்
ஸ்ரீமதி சங்கரி தம்பதிகள்
நங்கநல்லூர்.

மஹாராஜஸ்ரீ
து.ஷ.இரத்தினசபாபதிக் குருக்கள்
ஸ்ரீமதி. கலாவதியம்மா தம்பதிகள்
மாவிட்டபுரம், தெல்லிப்பழை (இலங்கை)
0091 - 7358 171125, 0094 - 7710 42257

(cs.50226) (N.1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1 ஆம், 2 ஆம் ஆண்டு நினைவலைகள்

கடந்த 12.05.2022 அன்று சிவபதமடைந்த எமது மகன்
**அமரர் பாலசுப்பிரமணியம் நிபோஷன்**
அவர்களது 1 ஆம் ஆண்டு நினைவாக

கடந்த 08.11.2020 அன்று சிவபதமடைந்த எமது மகள்
**அமரர் பாலசுப்பிரமணியம் நிபோஜனா**
அவர்களது 2 ஆம் ஆண்டு நினைவாக



பிறப்பு 21.09.1998
இறப்பு 12.05.2022

**ஆறாத பெரு வலியில் ஆண்டுகள் கடக்கிறது**

காலப் பெருவெளியில் எங்கள் கண்களினை தொலைத்து
விட்டு கண்ணீரில் வாழ்வதற்கு விதி செய்த மாயம் என்ன?
பெற்றெடுத்த வலி இன்னும் ஆறவில்லை...
பேதை என்னை கண்ணீரில் கரைய விட்டு சென்றதென்ன?
அம்மா என்றொருக்கால் நீங்கள் அழைக்கும் அசரீரி கேட்கிறது
திரும்பிப் பார்க்கின்றேன் உங்கள் திருமுகங்கள் சுவர்களிலே
படமாக தெரிகிறது... ஐயோ என் செய்வேன்??
நான் ஆற வழி தெரியவில்லை....
மார் மீதும் தோள் மீதும் நான் சீராட்டி வளர்த்த மக்கள் மேனியிலே
கொள்ளி வைக்கும் கொடுமையினை எனக்கு அள்ளி
வைத்தான் காலனவன்...
ஆறுமோ நெஞ்சம் இந்த அவலத்தை எண்ணுகையில்???
கூடியே வாழ்ந்த எங்கள் கூட்டினை கலைத்து விட்டான்
கொடியவன் காலன் ஐயோ தனியனாய் போனேன் இன்று....
கூடியே வாழ்ந்து நாங்கள் குதூகலித்திருந்த நாளை
எண்ணியே நொந்து வாழும் அவலமும் தந்து போனீர்...
எங்கள் கண்களே உம்மை நாளும் நெஞ்சத்துள்
பூஜித்திருப்போம்..... மறுபடியும் பிறப்பிருந்தால்
எங்கள் மடியிலேயே பிறந்திடுங்கள்.



பிறப்பு 20.12.2000
இறப்பு 08.11.2020

கூவில்,
கீரிமலை.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்


## நாட்டை முன்னேற்றும் திட்டம் அரசாங்கத்திடம் எதுவுமில்லை

### ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா சாடல்

நிறுவனங்களை விற்றுப் பணம் தேடும் நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் தற்போது ஈடுபட்டுள்ளது என்று ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டில் கடன் எடுப்பதற்கு இடமும் இல்லை. விற்பதற்குப் பொருளும் இல்லை. நாடு முன்னேறுவதற்கு வாய்ப்புமில்லை. அழிவை நோக்கியே நாடு செல்கின்றது. நாட்டின் உண்மை நிலை தெரிந்தவர்கள் நாடு மேலும் பின்னோக்கிச் செல்லப்போகின்றது என்பதை அறிவார்கள். இதுவொரு இடைவேளை, கடனை அடைப்பதற்கு மேலும் கடன் வாங்குதல், அரச நிறுவனங்களை விற்றுக் கடனை அடைத்தல் போன்றவை நாட்டை முன்னேற்றுவதற்கு உதவாது. இருக்கின்ற கடைசிச் சொத்தையும் விற்றுக் கடன் வாங்கும் இடம் தான் ஐ.எம்.எப். ஒரு டொலரைக்கூட மேலதிகமாகச் சம்பாதிப்பதற்கான வேலைத்திட்டம் அரசிடம் இல்லை. அரச நிறுவனங்களை விற்றுப் பணம் தேடும் நிலைப்பாட்டில் மட்டும்தான் அரசு ஈடுபட்டுள்ளது. அது மட்டும் தான் அரசிடம் இருக்கும் ஒரேயொரு திட்டம்.

பொருள்களின் விலை அதிகரிப்பால் அதன் கொள்வனவு குறைந்துள்ளது. மக்கள் சாப்பிடுவதைக் குறைத்துள்ளனர். எரிபொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளதாலும் கோட்டா முறையின் கீழ் எரிபொருள் வழங்கப்படுவதாலும் மக்கள் தேவையான அளவு மாத்திரமே எரிபொருள் வாங்குகின்றனர். சுற்றுலா செல்வதில்லை, தூர இடங்களுக்குச் செல்வதில்லை. இதனால் பெற்றோல் வரிசை இல்லை. இதெல்லாம் மேலோட்டமாகப் பார்க்கும்போது நிலைமை சரி வந்து விட்டது போல் தெரிகின்றது. ஆனால் உண்மை அது வல்ல. நிலைமை மேலும் மோசமடையும் - என்றார்.

(எ-14-22)

**பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம்**

# திருத்த யோசனைகளை கையளித்தது ஐ. ஒன்றியம்

## நீதி அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, மே 1**

**உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டவரைவில் மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்கள் குறித்த யோசனைகளை ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் கையளித்திருப்பதாக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார். அத்திருத்த யோசனைகளில் சாவுத்தண்டனை வழங்கலை நீக்கவேண்டும் என்ற விடயம் உள்ளடக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.**

அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டவரைவு தொடர்பில் பல்வேறுபட்ட எதிர்க்கருத்துக்களும் விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டுவரும் நிலையில், சகல தரப்பினரதும் யோசனைகளுக்கு அமைய அவசியமானதும், ஏற்றுக்கொள்ளக்கூடியதுமான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அச்சட்டவரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச வெள்ளிக்கிழமை அறிவித்துள்ளார்.

இந்நிலையில் நாட்டின் முக்கியமான அரசியல் கட்சிகள், சிவில் சமூகப்பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைத்துத்தரப்பினரிடமிருந்தும் திருத்த யோசனைகள் கோரப்பட்டுள்ள நிலையில், இதுவரையில் முன்னாள் சபாநாயகர் கரு. ஜயசூரிய தலைமையிலான சமூக நீதிக்கான தேசிய இயக்கம் மாத்திரமே அதன் யோசனைகளை சமர்ப்பித்துள்ளது. அதேவேளை முக்கியமான அரசியல் கட்சிகள் மற்றும் பல்வேறு சிவில் சமூக அமைப்புக்கள் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்ட வரைவை அரசாங்கம் முழுமையாக மீளப்பெறவேண்டும் என்பதே தமது நிலைப்பாடு என ஏற்கனவே அறிவித்துள்ளன.

இவ்வாறானதொரு பின்னணியில் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுடன் தொடர் சந்திப்புக்களில் ஈடுபட்டுவரும் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச, பயங்கரவாத எதிர்ப்புச்சட்ட வரைவின் உள்ளடக்கம் குறித்து அவர்களிடம் விளக்கமளித்து வருகின்றார்.

இந்நிலையில் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டவரைவில் மேற்கொள்ளப்படவேண்டிய சில திருத்த யோசனைகளை ஐரோப்பிய ஒன்றியம் தம்மிடம் கையளித்திருப்பதாகத் தெரிவித்த அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச, சாவுத் தண்டனையை நீக்கவேண்டும் என்ற விடயம் அந்த யோசனைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

(ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ 1991ல் பிறந்த மூலம் 1ம் பாதம், கி.பா 39 1/4, அரச பணி புரியும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை.

**077 6161 739**

(CS46693)(J-1)



## வாழ்த்துகின்றோம்

Best Wishes

தென்மராட்சியின் புகழ்பூத்த நாதஸ்வரக் கலைஞர் **கலாநிதி கே.எம். பஞ்சாபிகேஷன்** அவர்களின் புதல்வன்



### நாகேந்திரன்

அவர்களை கௌரவித்து கனடா றிச்மன்ட் கபிரியல் பல்கலைக்கழகம் (Richmond Gabiriel University) 15.04.2023 அன்று **கலாநிதிப் பட்டம்** வழங்கியமையையிட்டு தென்மராட்சி மக்கள் வாழ்த்துவதோடு மென்மேலும் பல.பட்டங்கள் பெற்று எம்பிரதேசம் பெருமையுற இறையருளை இறைஞ்சுகின்றோம்.

**வாழ்த்துவோர்:** வதனா டிஸ்பென்சறி
அம்பிகா டிஸ்பென்சறி
இந்திரன் ஜுவலறி
ஸ்ரார் ஹோட்டல்
குகன் ஸ்ரூடியோ
கதிர்வெல்டிங் வேக்ஸ்
திருக்கணித பதிப்பகம்

Best Wishes


## முள்ளிவாய்க்கால்...

தமிழ்த் தேசியத்தை நாளாந்த தேசியமாக உள்வாங்கி அடுத்த கட்ட நகர்வுக்கான உத்திகளை வகுக்க வேண்டி வரலாற்றுக் கட்டாயத்துக்குள் நாம் தள்ளப்பட்டிருக்கிறோம் - இவ்வாறு தெரிவித்துள்ளது முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு.

இது தொடர்பில் அந்த அமைப்பு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

பேரினவாத மேலாதிக்கத்தின் தமிழின அழிப்புச் சிந்தனையின் கொடிய கோரப்பற்கள், முள்ளிவாய்க்கால் மண்ணின் பிடியில் அடைக்கலம் அடைந்த ஈழத்தமிழினத்தின் இதயத்தில் ஆழப்பதிந்த நாள்கள் கடந்துபோய் 14 ஆண்டுகள் நிறைவடைகின்றன. மனிதாபிமானத்தையும் மனிதகுல நலனையும் கையிலெடுத்து, நவ காலனித்துவத்தை நிறுவும் கருவிகளாக அவற்றைப் பாவித்து நிற்கும் இன்றைய நவீன உலக ஒழுங்கின் கர்த்தாக்கள், செயலின்றிப் பார்த்திருக்க, நடுநிலை வகிக்கவென்று வந்தவர்கள் நாதியின்றி நாவடக்கம் காத்திருக்க, துடிக்கத்துடிக்க நாம் கொத்துக்குண்டுகளாலும், கதிரியக்கக் காரணிகளாலும், நாகரிக உலகத்துக்கும் மனித குலத்துக்கும் ஒவ்வாதெனத் தடைசெய்யப்பட்ட ஆயுதங்களாலும் போர் முறைகளாலும் பூவாய், பிஞ்சாய், காயாய், பழமாய் வேறுபாடுகள் கடந்து இனப்படுகொலை செய்யப்பட்ட நாள்கள் நடந்து முடிந்து 14 ஆண்டுகள் கடந்துவிட்டன.

இந்த இனப்படுகொலைகளின் 14ஆம் ஆண்டு நினைவேந்தலை முள்ளிவாய்க்காலில் உள்ள முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தல் முற்றத்தில், நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பால் எதிர்வரும் 18ஆம் திகதி முன்னெடுக்க நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

முள்ளிவாய்க்கால் வாரத்தில் (மே 11-18), முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறி தமிழினப் படுகொலை நினைவுத்திறத்தை நீதி வேண்டிய பயணத்தில் வினைத்திறன்மிக்கதாக்க தமிழ்த் தேசியத்தை நாளாந்த தேசியமாக உள்வாங்கி அடுத்தகட்ட நகர்வுக்கான உத்திகளை வகுக்க வேண்டிய வரலாற்றுக்கட்டாயத்துக்குள் நாம் தள்ளப்பட்டிருக்கின்றோம் - என்றுள்ளது.

(அ-ம)


## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு

# பதவி வெற்றிடம்

கோவிலின் கீழ்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுவதானல் உரிய தகைமைகளுடையவர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட படிவத்தில் தங்களுடைய விபரங்களை பூரணப்படுத்தி **13.05.2023 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்னர் கோவிலில் கிடைக்கக் கூடியதாக "செயலாளர்" அறங்காவலர் சபை, ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு** எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

1. **மின் இயக்குநர்** (Electrician)
2. **கணக்குப்பதியுநர்** (Book Keeper)
3. **கணினி இயக்குநர், வடிவமைப்பாளர்** (Computer Designer)

**திரு.ந.மோகனரூபன்**
**செயலாளர்,**
**அறங்காவலர் சபை,**
**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு.**

(cr.39759) (N-1)


## மரண அறிவித்தல்



தோற்றம் 12 . 02 . 1944

மறைவு 28 . 04 . 2023

### திருமதி கண்ணையா செல்வலட்சுமி

யாழ்ப்பாணம் திருநெல்வேலியை பிறப்பிடமாகவும், இல.737 சிவிக் சென்ரர், வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்ணையா செல்வலட்சுமி கடந்த (28.04.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கண்ணையா (கண்ணன்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான காசிநாதன், சிவலிங்கம், திருச்செல்வம் மற்றும் புவனேஸ்வரி, காலஞ்சென்றவர்களான யோகம்மா, இராஜேஸ்வரி, மற்றும் வசந்தாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கணேசன் (பாபு), ராஜன் (கனடா), விஜயன் (ஜேர்மனி), நந்தினி (வட்டக்கச்சி), சாந்தினி (ஆசிரியை- யாழ்/ புனித சென். ஜோசப் வித்தியாலயம்), தயாபரன் (சுவிஸ்), நளினி (ஜேர்மனி), ரஜனி (மன்னார்), மாலினி (வட்டக்கச்சி), சிவாஜினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், வினோதினி (கனடா), நளாயினி (ஜேர்மனி), காலஞ்சென்ற செல்வராசா, குகநாதன் (யாழ்ப்பாணம்), மகிழினி (சுவிஸ்), தேவராஜா (ஜேர்மனி), மைதீபன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - மன்னார்), குணசேகர் (பிரான்ஸ்), கேதீஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கோகுலன், பிரவீனா, பிரசன்னா, பகீரதன், துவாரகன், துவாரகா, பிரதீப், லிடியா, ஜொனார்த்தனன், அபிரா, அருண், அஜித், டெனிசா, டினோஜா, விதுஷன், நிர்ஜா, குணாளன், அபிவர்ணா, மாதுளன், பியர், ஜோய், ஷாம், ஷாரா தனுசிஜா, அபிஷன், அக்ஷயன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.05.2023) செவ்வாய்க்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் பன்னங்கண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 644 9707**
**076 453 0376**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS46693)(J-1)

## மரண அறிவித்தல்



மண்ணில் 19 . 04 . 1954

விண்ணில் 30 . 04 . 2023

### நடேசன் அமிர்தலிங்கம்

**(ஓய்வுபெற்ற பாடசாலை பணியாளர், செங்குந்த இந்துக் கல்லூரி)**

செங்குந்த வீதி, திருநெல்வேலி கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடேசன் அமிர்தலிங்கம் நேற்று (30.04.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடேசன் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - தங்கம்மா தம்பதியரின் மருமகனும், மனோன்மணியின் அன்புக் கணவரும், விஜிந்தினியின் (அபிவிருத்தி உத்தியோகத்தர், கமநல அபிவிருத்தி திணைக்களம், மாவட்ட காரியாலயம், யாழ்ப்பாணம்) பாசமிகு தந்தையும், Dr.யதுநந்தனனின் (சுகாதார வைத்திய அதிகாரி, சங்கானை) அன்பு மாமாவும், சர்வின் (மாணவன், யா/யாழ்.இந்துக் கல்லூரி), ஆருத் (மாணவன் யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்), ஹரிஷ்ராகவ், ஹரிஷ்ஆதவ், ஆதன் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான பரமலிங்கம், புவனேஸ்வரி மற்றும் செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான நவமணி, அன்னபூரணம், செல்வராஜா மற்றும் சரஸ்வதி காலஞ்சென்ற ஜோதீஸ்வரி மற்றும் தேவராணி, புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2023) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

செங்குந்த வீதி, திருநெல்வேலி கிழக்கு,
**077 316 4617**
**077 3961163**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 24684) A-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பிரபாகரனின்...

விடைத்தாள் திருத்தத்தில் ஈடுபடாமல் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடும் ஆசிரியர்களை பயங்கரவாதிகள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'சர்வதேச நாணய நிதியத்தை நாட வேண்டும் என எதிர்க்கட்சிகளே வலியுறுத்தின. ஆனால், அந்தத் தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கான வாக்கெடுப்பின்போது எதிர்க்கட்சியினர் சபையில் இருக்கவில்லை. இதன்மூலம் அவர்களின் நோக்கம் தெளிவாகின்றது.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் நாட்டுக்கு அவசியம். தற்போது புதிய சில பயங்கரவாதிகள் உருவாகியுள்ளனர். அரசிடம் சம்பளத்தை வாங்கிக்கொண்டு, விடைத்தாள் திருத்தாமல் உள்ளனர். மாணவர்களுக்கு கல்வி கற்க விடாமல் அவர்களை வீதிக்கு அழைத்துவருகின்றனர். இப்படியான பயங்கரவாதிகளும் உள்ளனர். இவர்கள்தான் புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தை எதிர்க்கின்றனர்.

அதேவேளை, பிரபாகரனின் கதையை முடிப்பதற்கு பங்களிப்பு வழங்கிய படையினருக்கு அமெரிக்கா தடை விதிப்பது வழமை. தமது நண்பர் இறந்துவிட்டதால் அவர்களுக்கு (அமெரிக்கா) கவலை இருக்கும். இதனால்தான் கோத்தாபய ராஜபக்சவை வீட்டுக்கே விரட்டினர்' - என்றார். (அ-ம-44)

## மஹிந்தவைப்...

தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அந்தக் கட்சி இன்று தீர்க்கமான முடிவெடுக்கும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் இது தொடர்பில் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவை மீண்டும் பிரதமராக அரியணை ஏற்றுவதற்கு பெரமுனவினர் தீவிரமான முயற்சிகளை திரைமறைவில் முன்னெடுத்துள்ளனர். பெரமுனவின் இன்றைய மேதினக் கூட்டத்தில் இது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது - என்றார்.

அவரின் இந்தக் கருத்தை பெரமுன உடனடியாக நிராகரித்துள்ளது. பெரமுனவின் மேதினக் கூட்டம் தொடர்பில் தவறான கருத்தை ஏற்படுத்துவதற்காகவே இவ்வாறான போலிக் கருத்துக்கள் பரப்பப்படுகின்றன என்று பெரமுன தெரிவித்துள்ளது. (அ-ம-44)

## அமைச்சரவை...

தொடர்ச்சியாகத் தகவல்கள் பரவிய நிலையில், தமக்குப் பதவிகள் கிடைக்கும் என மொட்டுக் கட்சியினர் எதிர்பார்ப்புடன் இருந்தனர்.

மொட்டுக் கட்சியில் யார், யாருக்கு பதவிகள் வழங்கப்படவேண்டும் என்ற பெயர்ப் பட்டியலும் ஜனாதிபதிக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. எனினும், அமைச்சரவை மாற்றம் தற்போது நடைபெறாது என ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-ஓ.44)

## 3 மாத...

அதிகாலை 3 மணியளவில் சேர்க்கப்பட்டுள்ளார். அவர் அதிகாலை 5 மணியளவில் உயிரிழந்துள்ளார். பலோப்பியன் குழாயில் குழந்தை தங்கியுள்ளது. அதனால் பலோப்பியன் குழாய் வெடித்து உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் கண்டறியப்பட்டுள்ளது என்று முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையின் சட்டமருத்துவ நிபுணர் க.வாசுதேவா அறிக்கையிட்டுள்ளார்.

உயிரிழந்த பெண் கருவுற்றதிலிருந்து மாதாந்த கிளினிக்குகளுக்குச் சென்றுள்ளார். இருந்தும் கரு பலோப்பியன் குழாயில் வளர்வது கண்டறியப்படவில்லை. இந்த நிலையில் அவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ஓ.5)

## பெற்றோல்...

இதன்படி 92 ஒக்ரேன் பெற்றோலின் விலை லீற்றர் ஒன்றுக்கு 7 ரூபாவால் குறைக்கப்பட்டு, புதிய விலையாக 333 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 95 ஒக்ரேன் பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 365 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. டீசல் ஒரு லீற்றரின் விலை 15 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 310 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சுப்பர் டீசலின் விலை லீற்றர் ஒன்றுக்கு 135 ரூபா குறைக்கப்பட்டு புதிய விலையாக 330 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## போதை...

சுன்னாகம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொண்ட நடவடிக்கையின்போதே மேற்படி நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதான சந்தேகநபர் 29 வயதுடையவர் என்றும் அவரிடமிருந்து 74 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-125)

## மின்சாரம்...

துள்ளார். செல்வராசா சசிதரன் (வயது -40) என்பவரே உயிரிழந்தவராவார்.

கோப்பாய் பிரதேச செயலகத்தின் முன்பாகவுள்ள வாகனத் திருத்தகத்தில் வாகனமொன்றைப் பழுது பார்த்தபோது அவர் மின்தாக்குதலுக்கு உட்பட்டுள்ளார். இதையடுத்து அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதிலும் சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-125,26)

## இரு...

முழுமையடைந்துவிடும். அதன் பின்னர் காங்கேசன்துறை - கொழும்பு இடையே ரயில்களை சேவையில் ஈடுபடுத்த முடியும் என்று தெரிவித்தார் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அநுராதபுரத்துக்கும் ஓமந்தைக்கும் இடையிலான தண்டவாளங்களை மேம்படுத்தும் பணிகள் தற்போது துரிதமாக மேற்கொள்ளப்படுகின்றன. இந்தப் பணிகள் நிறைவடைந்ததும் ரயில்கள் சேவையில் இயக்கப்படும். தண்டவாளங்களில் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் காரணமாக, வடக்குப் பாதையில் சராசரியாக மணிக்கு 100 கிலோமீற்றர் வேகத்தில் ரயில்களை இயக்கமுடியும். இதனால் பயண நேரம் சுமார் 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள் குறைவடையும் - என்றார். (அ-ம)

## அரசியல்...

அவர்களும் எதிரணியின் நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே செயற்படுகின்றனர் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் ஆரம்பிக்கப்பட்ட சர்வகட்சி பேச்சு இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளமை தொடர்பில் கொழும்புச் செய்தியாளர் ஒருவர் ஜனாதிபதியிடம் எழுப்பிய கேள்விக்கே மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

'எதிர்க்கட்சிகள்தான் குழப்பியடிக்கும் வகையில் செயற்படுகின்றன. இறுதியாக நடைபெற்ற சர்வகட்சிக் கூட்டத்தை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி புறக்கணித்திருந்தது. இதிலிருந்து இந்த முயற்சியை குழப்பியடிக்கும் எதிரணியின் வியூகம் எமக்குத் தெரிகின்றது.

தமிழ்க் கட்சிகள் தீர்வு விடயத்தில் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கினாலும் அவர்களை எதிர்க்கட்சிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவே செயற்படுகின்றார்கள். அரசு - எதிர்க்கட்சி என்று சொன்னால் ஆதரவுகளும் எதிர்ப்புக்களும் இருக்கத்தான் செய்யும். அதற்காக நாட்டினதும் மக்களினதும் நன்மை கருதிய செயற்பாடுகளை எதிர்ப்பதில் அர்த்தமில்லை. தேசிய இணக்கப்பாட்டு பணிகளுக்கு எதிர்க்கட்சிகள் ஒத்துழைத்தால் சர்வகட்சி பேச்சை முன்னெடுத்துச் செல்லலாம்' என்றார் ஜனாதிபதி ரணில்.

ஜனாதிபதியின் சர்வகட்சிப் பேச்சில் பங்கெடுப்பதாக இருந்தால் அவரால் சில விடயங்கள் நிறைவேற்றப்படவேண்டும் என்று தமிழ்க் கட்சிகள் நிபந்தனை விதித்திருந்தமையும் அவை இன்னமும் நிறைவேற்றப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ஓ,5,22)

## சிறுமிகள்...

வாரம் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சியைச் சேர்ந்த இரண்டு சிறுமிகளும் வீட்டிலிருந்து தப்பித்து பேருந்தில் யாழ்ப்பாணம் வந்துள்ளனர். யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் அவர்கள் இரவு நேரம் தனித்திருந்துள்ளனர். இதன்போது நகரிலுள்ள உணவகத்தில் பணியாற்றும் இளைஞர்கள் இருவர் அவர்களை அணுகி தங்குவதற்கு இடம் வழங்குவதாகத் தெரிவித்து விடுதிக்கு அழைத்துச்சென்று வன்புணர்வுக்குட்படுத்தியுள்ளனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. மறுநாள் அவர்களை மத்திய பேருந்து நிலையத்திலே விட்டுவிட்டுச் சென்றுள்ளனர். இவர்களில் ஒரு சிறுமியை மற்றுமொரு இளைஞன் நாவற்குழிக்கு அழைத்துச்சென்று வன்புணர்வுக்குட்படுத்தியுள்ளான் என்றும் பொலிஸ் விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தச்சிறுமியையும் பேருந்து நிலையத்தில் மீண்டும் கொண்டு வந்து விட்டுள்ளனர். இந்த நிலையில் காணாமற்போன சிறுமிகளைத் தேடிய பெற்றோர் யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் அவர்கள் இருப்பதை அறிந்துள்ளனர். இதன்போது தாம் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட விடயத்தை சிறுமிகள் தெரியப்படுத்தியதையடுத்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்தே சிறுமிகளை வன்புணர்வுக்குட்படுத்திய சந்தேகத்தில் 3 இளைஞர்களையும், பதின்மவயதுச் சிறுமியுடன் வந்த இளைஞர்களுக்கு விடுதி அறையை வழங்கிய சந்தேகத்தில் விடுதிமுகாமையாளரையும் பொலிஸார் கைது செய்தனர். (அ-ஓ.5)

## சிறுமி...

வெளிநாட்டில் பணிப்பெண்ணாகப் பணிபுரிந்து வருகின்றார். சிறுமி மாதாந்தக் கொடுப்பனவின் அடிப்படையில் பிறிதொருவரின் வீட்டில் தங்கியிருந்துள்ளார். சிறுமிக்குக் காய்ச்சல் ஏற்பட்டதையடுத்து அவர் பூவரசன்குளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். மருத்துவமனையில் சிறுமி துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டது. இது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், சிறுமி தங்கியிருந்த வீட்டில் இருந்த இளைஞரை சந்தேகத்தின்பேரில் கைதுசெய்துள்ளனர். (அ-ம-18)

## சிங்கள...

மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தையிட்டியில் சட்டவிரோதமாக தனியார் காணியில் அமைக்கப்பட்ட விகாரையைப் பார்வையிட்டு களநிலைவரங்களை ஆராய்ந்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த விகாரை அமைக்கப்பட்ட இடம் தனியாருக்குச் சொந்தமானது. சட்டவிரோதமான இந்த விகாரைக்கான கட்டட வேலைகள் இரண்டு வருடத்துக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்ட பொழுதே மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்களிலும், பிரதேச அபிவிருத்திக் கூட்டங்களிலும் இதுதொடர்பில் சுட்டிக்காட்டியிருந்தோம். இந்தக் கட்டட வேலைகள் உடன் நிறுத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தோம். இது தொடர்பில் தனியான கூட்டம் கூட்டப்பட்டு கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டபோதிலும் இது தொடர்பில் எந்தக் கூட்டமும் கூட்டப்படவில்லை. எந்தக் கலந்துரையாடலும் நடத்தப்படவில்லை. மாறாக இராணுவத்தினரின் முழுமையான பங்களிப்புடன் விகாரை கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

தையிட்டியில் மட்டுமல்ல இன்று தமிழர் தாயக நிலப்பகுதி முழுவதிலும் சிங்கள மயமாக்கல் வேலைத்திட்டத்திட்டமானது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. நாங்கள் இந்த விடயத்தை ஐ.நா. வரையிலும் பதிவு செய்திருக்கிறோம். ஆகவே எங்களைப் பொறுத்தவரையில் மக்கள் மட்டத்தில் இந்த நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படவேண்டிய கட்டாயம் இருக்கிறது. இவ்வாறான இனவாதப் போக்குக்கு எதிராக நாங்கள் ஒரு தேசமாக எதிர்ப்பைப் பதிவுசெய்ய வேண்டும். அல்லாதுவிடின் எங்கள் நிலப்பரப்புக்கள் பறிபோய்க்கொண்டே இருக்கும் - என்றார். (அ-ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர்சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பற் வீதி 100 m தூரத்தில்
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1km தூரம்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1km தூரம்
- 1 பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும் (120,000/=)

பார்வையிடும் நேரம் : காலை 06.00 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரை

தொடர்பு:-076 755 8606 077 638 5683

## வேலையாட்கள் தேவை

**பொருட்களை கொண்டு சென்று விநியோகிக்கும் வாகனத்திற்கு**

**பின்வரும் வேலையாட்கள் தேவை**

1. வாகன சாரதி - (Driver) 40 வயதிற்கு மேல் AD வாகன உரிமம் உள்ளவர்கள்
2. பண வசூலிப்பாளர் - (Cash Collector)
3. உதவியாளர் - (Porten)

**பின்வரும் வேலையாட்கள் தேவை**

1. களஞ்சிய பொறுப்பாளர் (முழு நேரம்)
2. பகுதிநேர வேலையாள்கள் (காலை)
(ஆண்கள் விரும்பத்தக்கது)

(cs.50249) (N-1)

தொடர்புகளுக்கு: 077 009 0189


## மரண அறிவித்தல்

பிறப்பு 04 . 09 . 1938



இறப்பு 30 . 04 . 2023

கவிஞர் கலாபூஷணம், கலைமாமணி, கூத்தாடி

# வி.சி.குஞ்சிதபாதம்

(கிழக்குமாகாண கல்முனை கலாலயத்தின் நிறுவுனரும் காதலிப்போமா? இவளைப்பார் ; ஆகிய வெற்றி நாடகங்களின் கதை, வசன கர்த்தாவும், பாடலாசிரியரும், பிரதம நடிகரும், இயக்குநருமாவார். மேலும் சுண்டிக்குழி யாழ். நாடகக் கலாமன்றத்தின் 1338 அரங்குகளேறிய புகழ் பூத்த **"அடங்காபிடாரி"** நாடகமுட்பட மன்றத்தின் 48 நாடகங்களினதும் இயக்குநரும், நடிகரும், பாடலாசிரியரும், இளைப்பாறிய உள்ளூராட்சி சேவை எழுதுநருமாவார்)

யாழ்ப்பாணம் சுண்டுக்குளியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வி.சி. குஞ்சிதபாதம் நேற்று (30.04.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விகடவிற்பன்னர் வேலுப்பிள்ளை செல்லையா அன்னம் தம்பதியரின் இளைய புதல்வரும், காலஞ்சென்றவர்களான முருகண்டி மா. தம்பையா யோகம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புத் துணைவரும், அமுதா, பிரதீபன், பார்த்திபன், பகீரதன் ஆகியோரின் அருமைத் தந்தையும், தங்கேஸ்வரன், சிவசுதாகனி, சிந்துலா ஆகியோரின் மாமனும், விதுரன், திவ்யன், நித்யன், சௌமியன், சௌமியா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான திருமதி க. கிருகாம்பிகை, **"அடங்காப்பிடாரி"** நாடகமுட்பட்ட மன்றதின் ஏனைய நாடகங்களினதும் கதை வசன கர்த்தாவும், பிரதமநடிகரும், இளைப்பாறிய யாழ். அஞ்சலக உத்தியோகத்தருமான காலஞ்சென்ற நாடகக் கலாமணி வி.சி. பரமானந்தம், திருமதி ச. தயாநிதி, இளைப்பாறிய ஆசிரியர் வி.சி. நமசிவாயம், திருமதி து.மங்கையர்க்கரசி இளைப்பாறிய நெசவுப் போதனாசிரியை ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான நாடகமாமணி கனகையா, சந்திரசேகரி, துரைராசா, சரஸ்வதி, பத்மாவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2023) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், கலைஞர்கள், கவிஞர்கள் ஆகிய அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**29, சந்தனமாதா கோவில் வீதி,**
**சுண்டுக்குளி,**
**யாழ்ப்பாணம்.**

(cs.50253) (N-1)

**தகவல்:**
**குடும்பத்தினர்**


www.edus.lk
EDUS Learning made lovable
தமிழ் | සිංහල | English

## G.C.E O/L 2022

மாணவர்களுக்கான **இறுதி கருத்தரங்கு**



ஆங்கிலம் வரலாறு விஞ்ஞானம் கணிதம் தமிழ்

- முன்னோடி ஆசிரியர்களின் வழிகாட்டலில் உருவாக்கப்பட்ட மாதிரி வினாத்தாள்கள் & Recordings.
- முக்கிய குறிப்புகளுடன் கூடிய தெளிவான விளக்கங்கள்.
- மாணவர்களின் வெற்றிக்கு பரீட்சை எழுத முன்னரான ஆயத்தங்கள் தொடர்பான முழு அறிவுறுத்தல்களும் ஊந்துதலும் கருத்தரங்கின் இறுதிநாள் இலங்கையின் சிறந்த வள்வாளரால் நடைபெறும்.
- கீழ்க்காணும் வங்கிக்கணக்கிற்கு பணம் வைப்பிலிட்டு பற்றுச்சீட்டினை மாணவர் பெயர்,பாடசாலை மற்றும் WhatsApp இலக்கம் போன்றவற்றுடன் 0777 123 330 க்கு April 30ம் திகதிக்கு முன்னராக அனுப்பி இணைந்துகொள்ளவும்.

ரூ . 2,000 5 பாடங்களுக்குமான மொத்த கட்டணம்

May 1 - 12 தினமும் மாலை 7 மணி

Bank of Ceylon EDUS Lanka (PVT) Ltd. 87979133 Kokuvil Branch.

மேலதிக விபரங்களுக்கு : 0777 123 330 / 011 44 77 488 APPLY NOW அனுமதிகளுக்கு முந்துங்கள்..!

## காணி விற்பனைக்கு உண்டு


- யாழ்ப்பாணம் புத்தூரில் 15 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- மூன்று பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்.
- நன்னீரூற்று
- குடியிருப்பு சூழவுள்ள பகுதி

பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை. (முழுக்காணிகளும் பிரதான காபற் வீதி முகப்புடனே உள்ளது).

(ஒரு பரப்புக் காணியின் விலை மூன்று இலட்சம் (300,000/=)



தொடர்பு: 076 1653 129 076 9119 371

(CS 24698 N) A-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **கைதடி** A-9 **பிரதான வீதியுடன்** 05 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ✓ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- ✓ திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ✓ ஒரு பரப்பின் விலை 35 இலட்சம்

**பார்வையிடும் நேரம்:-**
**காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

**தொடர்புகளுக்கு: ஜெயம்**
077 8147 389
077 9865 457

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 04 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- ✓ A-9 பிரதான வீதியில் இருந்து 700M தூரம்.
- ✓ காய்க்கும் தென்னைகள் 24 உள்ளன.
- ✓ 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✓ ஒரு பரப்பின் விலை 19 இலட்சம் முதல் 17 இலட்சம் வரை

**பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

தரகர் தேவையில்லை.

**தொடர்புகளுக்கு: ஜெயம்**
077 8147 389
077 9865 457

(CS 24650) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.